DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 164/2019** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : சுதா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25 June 2026.

**A1 died. A2, A3 எதிரிஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ஆனையூர் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். மாலதி எனது தங்கை ஆவார். 2017 ம் வருடம் ஒரு நாள் மாலை 5.00 மணிக்கு அ.சா.1–ன் வீட்டில் இருந்துகொண்டிருந்தபோது, அ.சா.1–யை ஆஜர் எதிரிகள் 3 பேரும் சேர்ந்து என் தங்கை அ.சா.1–யை வீட்டின் முன்பாக உள்ள முற்றத்தில் வைத்து 1–ம் எதிரி மூர்த்தி கையில் முள் கம்பை வைத்து உடல் முழுவதும் கம்பால் அடித்து கொண்டடிருந்தபோது நானும் என் கணவர் முருகனும் அம்மா உச்சிமகாளியும் அ.சா.1 வீட்டிற்கு சென்றோம். அவருக்கு உடல் முழுவது காயம்

ஏற்பட்டிருந்தது. பின்னர் 2–ம் எதிரியும் கையில் வைத்திருந்த முள் கம்பை வைத்து அ.சா.1–ன் வலது தோல்பட்டையில் அடித்து காயப்படுத்தினார். 3–ம் எதிரியும் அடித்து காயப்படுத்தினார், 3–எதிரியும் சேர்ந்து அ.சா.1–யை பார்த்து தேவடியா, பலவட்டறை என்று அசிங்கமாக பேசி அன்று நீ தப்பி விட்டாய் உன்னை கொல்லால் விடமாட்டேன் என்று கொலைமிரட்டர் விடுத்தார். பின்னர் நானும் அ.சா.1, காவல் நிலையம் சென்றோம். பின்னர் அ.சா. 1–யை மருததுவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலிசர் விசாரித்தபோது 3 எதிரிகளும் கம்பால் அ.சா.1 யை அடித்ததாகத்தான் சென்னேன் என்றால் சரிதான். என்னுடைய வீடு அ.சா.1–ன் தெருவிற்கு அடுத்ததெரு என்றால் சரிதான். மல்லிகா என்ற பெண் இருமன்குளத்தில் இருந்து அ.சா.1–ன் வீட்டிற்கு வந்ததாகவும், அங்கு அ.சா.1 க்கும் மல்லிகாவிற்கும் சண்டை நடப்பதாகவும், பின்பு எதிரிகளுடன் சண்டை நடப்பதாகவும், அக்கம்பக்கத்தினர் தகவல் தெரிவித்து நானும் என் கணவரும் அ.சா.1–ன் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். நான் அ.சா.1–ன் வீட்டிற்கு செல்லும் போது அ.சா.1 உடம்பில் காயம் பட்டு கீழேயும் கிடந்தார். எதிரகள் அடித்துக்கொண்டிருந்தனர் என்றால் சரிதான். அ.சா.1 க்கு இரத்தகாயம் இருந்ததாக என்றால் இரத்தகாயமும், வீக்ககாயமும் இருந்தது. நானும் அ.சா.1–ம் காவல்நிலையம் சென்றவுடன் அவர்கள் வெள்ளை காகிதத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எங்கள் இருவரையும் மருத்துவமனைக்கு போக்சொன்னார்கள் என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனைக்கு நானும்என் கணவரும் கொண்டு போய் சேர்த்தோம் என்றால் சரிதான்.

எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் தனிப்பட்ட விரோதம் உள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 ம் அவர் கணவருக்கும்கருத்து வேறுபாடு ஏற்பட்டு வழக்கிற்கு முன்பு பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். மல்லிகாவிற்கும் அ.சா.1–க்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 வீட்டிற்கு செல்வதற்கு முன்பே அக்கம்பக்கத்தில் குடியிருக்கும் நபர்கள் அங்கு கூடியிருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் 2–வது எதிரி முள் கம்பால் அ.சா.1–யை வலது தோல்பட்டையில் அடித்து காயப்படுத்தியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் அ.சா.1–க்கு வலது தோல்பட்டையில் உள்ள காயத்தை பார்தேனா என்றால் பார்த்தேன். மேலும் உடல் முழுவதும் வெளிக்காயத்தை பார்த்தேன். முதல் விசாரணையில் கூறுவது போல் எதிரிகள் அ.சா.1–க்கு எதிராக எவ்வித குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் அ.சா.1–யை விசாரிக்கும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அ.சா.1 அப்போது மருத்துவரிடம் 3 ஆண் நபர்கள் ஒரு பெண் நபர் அடித்ததாக சொன்னார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சங்கன்கோவில் அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் சிகிச்சையில் இருந்தார் என்றால் ஒரு வாரம் இருந்தார். நானும் ஒருவாரம் அ.சா.1–ன் அரசு மருத்துவமனையில் இருந்தேன். அ.சா.1 க்கு எந்த காயமும் இல்லை பொய்யாக உடலில் வலி இருப்பதாக கூறி மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் மருத்துவர் அ.சா.1 க்கு எவ்வித வெளிக்காயமும் இல்லதகால் மருத்துவர் அ.சா.1–யை புறநோயாளியாக பாவித்து உடனடியாக அனுப்பிவிட்டார் என்றால் சரியல்ல. அ.சா.1 நான்

மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும், யார் மருத்துவமனையில் சேர்த்தார் என்ற விபரமே எனக்கு தெரியாது என்றாலும், சரியல்ல. அ.சா.1 க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான்.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.